20.11.2025

O.S.No.470/2013

பி.வா.சா.1.திரு.செல்வமணி, த.பெ.திரு.பெரியகருப்பன்.

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**குறுக்கு விசாரணை**

1. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் ஈரோடு முகவரி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து 2–1/2 செண்ட் என்றால் சரிதான். நான் வியாபாரம் செய்து வருகிறேன். பரமத்தி–வேலூர், சோழசிராமணி ஊரில் வியாபாரம் செய்கிறேன். 45 ஆண்டுகளாக வியாபாரம் செய்கிறேன். மேலவளவு கிராமத்தில் அப்துல் காலம் வித்ய பவன் என்ற பெயரில் பள்ளிக் கூடம் நடத்துகிறேன். நான் 3ம் வகுப்பு வரை படித்துள்ளேன். வழக்கானது வாதியால் தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை செய்யக் கேட்டு தாக்கல் செய்துள்ளாரா என்றால் ஆமாம். வழக்கிடை சொத்து வாதிக்கு 4 தலைமுறையாக பாத்தியப்பட்டது என்று சொல்லியுள்ளார் என்றால் அது தவறு.

2. 12.08.2009ம் தேதியில் வா.சா.ஆ.3 ஆவணம் எனது பெயரில் 1, 2 பிரதிவாதிகள் எழுதிக் கொடுத்த ஆவணம் செல்லாது என்று வாதி பரிகாரம் கோரியுள்ளார் என்றால் ஆமாம். வா.சா.ஆ.3 ஆவணத்தில் கிரையம் எழுதிக் கொடுத்த நபருக்கு சொத்து எவ்வாறு பாத்தியம் என சொல்லப்பட்டுள்ளது என்றால் ராமக்காளை என்பவருக்கு அம்மாசி என்பவரும், எனது அப்பா பெரிய கருப்பனும் மகன்கள் ஆவார்கள். எழுதிக் கொடுத்த ராஜா என்பவர் எனக்கு சித்தப்பா முறை ஆவார். 15 நபர்களுக்கு பங்கு இருந்தது. ராஜா என்பவரை பொறுப்பாக வைத்து விற்பனை செய்து அனைவரும் ரூ.200/– வீதம் பங்கு பெற்றுக் கொண்டுள்ளார்கள்.

3. வாதி வழக்குரையில், தாவா சொத்தில் வளம் தரக்கூடிய ஒரு புளியமரம் உள்ளது என்று தெரிவித்துள்ள விவரம் தெரியுமா என்றால் நான் தான் அந்த புளியமரத்திற்கு தண்ணீர் ஊற்றி வளர்த்தேன். புளிமரத்தை வா.சா.ஆ.3 கிரைய ஆவணத்தில் காண்பிக்கவில்லை என்றால் சரிதான். வ.சா.ஆ.3 ஆவணத்தில் புளியமரம் குறித்து எந்தவொரு விவரமும் தெரிவிக்கப்படவில்லை என்றாலும், நான் தாக்கல் செய்த எதிர்வழக்குரையிலும், புளியமரத்திற்கு நான் தான் தண்ணீர் ஊற்றி வளர்த்தேன் என்று தெரிவிக்கவில்லை என்றாலும், நான் தான் தண்ணீர் ஊற்றி வளர்த்தேன். இந்த வழக்கில் சொல்லியுள்ளார்களா என்று தெரியவில்லை. மேற்படி, புளியமரம் வாதிக்கு பாத்தியப்பட்டது அல்ல என்றும், எனக்கு தான் பாத்தியப்பட்டது என்றும், நான் தாக்கல் செய்த எதிர்வழக்குரையிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 அடங்கலின்படி, 422ம் பசலிக்கு வாதியின் பெயரில் தான் வழக்கிடைச் சொத்து உள்ளது என்றால் சரியல்ல. அதேபோல் வா.சா.ஆ.2 கணினிச் சிட்டா வாதியின் பெயரில் தான் உள்ளது என்றால் சரியல்ல. வா.சா.அ.3 ஆவணத்தின் அசல் ஆவணம் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை.

4. பி.வா.சா.ஆ.1 ஆவணம் யார் மூலம் பெறப்பட்டது என்றால் நாங்கள் தான் வாங்கினோம். பி.வா.சா.ஆ.1 ஆவணம் நான் வாங்கி தாக்கல் செய்யவில்லை என்றாலும், பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை வாங்கிய நபரை விசாரிக்காமல் பி.வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆவணம் அல்ல என்றால் சரியல்ல. தற்போது, 1435 பசலி நடைபெறுகிறது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. பி.வா.சா.ஆ.2 ஆவணமானது 1383ம் பசலிக்கானது என்றாலும், ஏறத்தாழ 50 ஆண்டுகளுக்கு முந்தைய

ஆவணம் என்றாலும் சரிதான். பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொ.பெரிய கருப்பன் என்பவரிடமிருந்து நான் கிரையம் வாங்கவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் உள்ள வழக்கு சொத்தும், தாவா சொத்தும் வேறானது என்றால் சரிதான்.

5. எதிர்வழக்குரை பாரா 8ல் வாதி முன்னிலையில் தான் தாவா சொத்து அளந்து கொடுக்கப்பட்டதாக சொல்லியுள்ளது சம்பந்தமாக எந்தவொரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் வாதி தான் அளந்து கொடுத்தார். நான் சொல்வதுபோல் வாதி எந்த காலத்திலும் முன்னின்று அளந்து கொடுக்கவில்லை என்றாலும், அவ்வாறு அளந்து கொடுத்திருந்தால் வழக்கு தாக்கல் செய்ய வேண்டிய அவசியமே இல்லை என்றாலும் சரியல்ல.

6. வாதி ஆசிரியராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றவர் என்றால் ஆமாம். தாவா சொத்து 2, 3 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்பதற்கான மூல ஆவணங்கள் எதுவும் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் எல்லா ஆவணங்களும் கொடுத்துள்ளோம். வாதி சொத்தை விலைக்கு கேட்டார் என்றாலும், கொடுக்க மறுத்ததால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொல்லியிருப்பது உண்மையல்ல என்றால் சரியல்ல. உண்மையில் அவ்வாறு கேட்டிருந்தால் நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியிருப்பேன் என்றால் சரியல்ல. எந்த உரிமையும் இல்லாத நபரிடமிருந்து நான் சொத்தை கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. வாதி தான் தாவா சொத்தின் உண்மையான உரிமையாளர் என்றாலும், எனவே நான் கிரையம் வாங்கிய ஆவணமானது சட்டப்படி செல்லக்கூடியதல்ல என்றாலும் சரியல்ல. நான் வில்லங்க சொத்துக்களை பள்ளிக் கூடத்திற்கு சேகரமாக இருக்க

வேண்டும் என சொல்லி பிரச்சனை செய்து வருகிறேன் என்றால் இல்லை. தாவா சொத்து எனது அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல. வரி இரசீதுகளும் போட்டுள்ளேனா என்றால் இல்லை. எனவே, என்னுடைய ஆவணமும் செல்லக்கூடியதல்ல என்றாலும், நான் அனுபவத்தில் இருந்து வருவதாக சொல்வது ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல என்றாலும் சரியல்ல. எனவே, வாதிகள் கோரும் பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

(திரு.P. மகாராஜன், எம்.எல்.,)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.